


தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, செப்டம்பர் 06, 2026 | இதழ் 146

## செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் வீரத்தையும், தேசப்பற்றையும், தியாகத்தையும் நினைவுகூர்ந்து போற்றுவோம் : முதல்வர் விஜய் பதிவு

சென்னை, 06 செப்டம்பர் 2026: செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் வீரத்தையும், தேசப்பற்றையும், தியாகத்தையும் நினைவுகூர்ந்து போற்றுவோம் என முதலமைச்சர் விஜய், தெரிவித்துள்ளார்.

வ.உ.சிதம்பரனார் பிறந்தநாளையொட்டி முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்; இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தன்னிகரற்ற வீரத்துடனும், தியாக உணர்வுடனும் போராடி, மக்கள் மனங்களில் சுதேசி உணர்வை விதைத்த "கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளில், அவருக்கு எனது புகழ் வணக்கங்களைச் செலுத்துகிறேன்.



ஆங்கிலேயரிடமிருந்து அரசியல் விடுதலை மட்டுமின்றி, பொருளாதார விடுதலையும் அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையில், சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி, இந்தியர்களின் தன்னம்பிக்கைக்கும், தற்சார்பு உணர்விற்கும் புதிய எழுச்சியை ஏற்படுத்தியதோடு, உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தையும் முன்னெடுத்தவர் வ.உ.சிதம்பரனார்.

தாய்நாட்டின் விடுதலை, சுதேசி உணர்வு, உழைப்பாளர்களின் உரிமை ஆகியவற்றிற்காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த "செக்கிழுத்த செம்மல்" வ.உ.சிதம்பரனாரின் வீரத்தையும், தேசப்பற்றையும், தியாகத்தையும் இந்நாளில் நினைவுகூர்ந்து போற்றுவோம் என்று குறிப்பிட்டு உள்ளார்.

## ஆசிரியர்களின் மகத்தான பணிகளைப் போற்றுவோம் - முதல்வர் விஜய் பதிவு

சென்னை 06, செப்டம்பர் 2026: ஆசிரியர் தினத்தை முன்னிட்டு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்; இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், தலைசிறந்த கல்வியாளருமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடும் இந்நன்னாளில், மாணவச் செல்வங்களின் வளமான எதிர்காலத்திற்காகத் தன்னலம் கருதாது பணியாற்றிவரும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்.

மாணவர்களின் மனங்களில் அறிவொளி ஏற்றி, ஒழுக்கம், ஈனித நேயம், சகோதரத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு உள்ளிட்ட உயரிய நற்பண்புகளை விதைத்து, அவர்களின் கனவுகளுக்குச் சிறகளித்து, திறமைகளுக்கு வழிகாட்டி, எதிர்கால வாழ்விற்கான




அடித்தளத்தை அமைத்துத் தருவதோடு, நாட்டின் வளர்ச்சியோடு ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்தையும் கட்டமைக்கும் உன்னதப் பணியை மேற்கொண்டுவரும் ஆசிரியப் பெருமக்களின் மகத்தான பணிகளைப் போற்றுவோம். ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், சிறந்த வழிகாட்டுதலும் நமது மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தை மேலும் ஒளிமயமாக்கட்டும் என்று குறிப்பிட்டுஉள்ளார்.

## ஆசிரியர்களின் முக்கியப் பங்களிப்புகளை எடுத்துரைக்கும் மத்திய அமைச்சரின் கட்டுரையைப் பிரதமர் பகிர்ந்துள்ளார்

சென்னை 06, செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய கல்வித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி எழுதிய ஒரு கட்டுரையைப் பகிர்ந்துள்ளார்.

ஆசிரியர்களைக் கொண்டாடும் இந்தியாவின் தொடர்ச்சியான பாரம்பரியம், அறிவைப் போதிப்பவர்களுக்கு அளிக்கப்படும் ஆழ்ந்த மரியாதையைப் பிரதிபலிக்கிறது என்று மத்திய அமைச்சர் எழுதியிருப்பதை பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கற்பவர்களைத் தகவல்களில் இருந்து புரிதலுக்கும், புரிதலிலிருந்து ஞானத்திற்கும் வழிநடத்துவதில் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை அந்தக் கட்டுரை எடுத்துக்காட்டுவதாகவும், கற்பவர்களின் நலனை மையமாக வைப்பதன் மூலம் புதிய தேசியக் கல்விக் கொள்கை - 2020, இந்தத் திசையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: "அறிவைப் போதிப்பவர்களுக்கு அளிக்கப்படும் ஆழ்ந்த மரியாதையை, ஆசிரியர்களைக் கொண்டாடும் இந்தியாவின் தொடர்ச்சியான பாரம்பரியம் பிரதிபலிக்கிறது என்று மத்திய கல்வித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி எழுதியுள்ளார். கற்பவரைத் தகவல்களிலிருந்து புரிதலுக்கும், புரிதலிலிருந்து ஞானத்திற்கும் வழிநடத்துவதில் ஆசிரியரின் முக்கியப் பங்கை அவர் எடுத்துரைக்கிறார்.

2020-ம் ஆண்டின் புதிய தேசியக் கல்விக் கொள்கையானது, கற்பவர்களை மையத்தில் வைப்பதன் மூலம், இந்தத் திசையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக அமைந்துள்ளது என்று அவர் கூறுகிறார்."

## குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கினார்

சென்னை, 06 செப்டம்பர் 2026: குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று (செப்டம்பர் 5, 2026) ஆசிரியர் தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற விழாவில், நாடு முழுவதிலுமிருந்து வந்த ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், நமது அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள சம வாய்ப்பு எனும் லட்சியத்தை நனவாக்குவதற்கு கல்வியே மிகவும் பயனுள்ள வழி என்று கூறினார். தொடக்கப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் மிகக் குறைவாக இருப்பது, ஆசிரியர்களின் முயற்சிகளாலேயே சாத்தியமாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த தேசிய வெற்றிக்குக் காரணமான அனைத்து ஆசிரியர்களையும் அவர் பாராட்டினார்.

பள்ளிக் கல்வி, கல்வி முறையின் அடித்தளமாக அமைகிறது என்று குடியரசுத்தலைவர் கூறினார். அறிவையும் திறன்களையும் எப்போது வேண்டுமானாலும் பெற முடியும் என்றாலும், குழந்தைப் பருவத்தில் நன்னடத்தைப் பாடங்களைக் கற்பிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று அவர் தெரிவித்தார். ஆரம்ப வகுப்புகளிலேயே குழந்தைகளின் அறிவுசார், உடல்சார், ஒழுக்கசார் நிலைகளில் விடாமுயற்சியுடன் கவனம் செலுத்துவதன் மூலம், நமது ஆசிரியர்கள் எதிர்காலத் தலைமுறையினரைச் சிறந்த மாணவர்களாகவும் கடமையுணர்வுள்ள குடிமக்களாகவும் உருவாக்க முடியும்



என்று அவர் கூறினார்.

பல மாணவர்கள் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வருவதாகவும் பலர் தங்கள் குடும்பத்தில் முதன்முறையாகக் கல்வி கற்கும் மாணவர்களாக உள்ளதாகவும் அவர் கூறினார். சிலர் மிகுந்த திறமை பெற்றிருந்தும் தன்னம்பிக்கை அற்றவர்களாக உள்ளனர் என்று அவர் தெரிவித்தார். மாணவர்கள் அனைவருக்கும் தன்னம்பிக்கையை அளித்து, அவர்களை மேம்படுத்துவது ஆசிரியர்களின் பொறுப்பாகும் என்று அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் கல்வி, திறன் மேம்பாடு, தொழில் முனைவு ஆகியவை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று குடியரசுத்தலைவர் கூறினார்.

இந்தியாவை உலகின் திறன் மையமாக நிலை நிறுவுவதும், ஒரு அறிவு வல்லரசாக மாற்றுவதும் நமது தேசிய முன்னுரிமைகளில் அடங்கும் என அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி நாம் முன்னேறி வரும் நிலையில், உலகத் தரம் வாய்ந்த கல்வி முறையின் மூலமாக மட்டுமே இந்த இலக்கை அடைய முடியும் என்றும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

## புதிய வரலாற்றை படைத்தது விண்வெளித்துறை; புதன் கிரகத்தை நெருங்கியது சர்வதேச விண்கலம்: பூமியிலிருந்து 8 ஆண்டுகளாக பயணித்து சாதனை

சென்னை 06, செப்டம்பர் 2026: சூரிய குடும்பத்தின் புதன் கிரகத்தை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட பெபிகொலம்போ விண்கலம் தனது இறுதிக்கட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்தது.

சூரியனுக்கு மிக அருகில் உள்ள புதன் கிரகத்தை ஆய்வு செய்ய அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான 'நாசா' கடந்த 1970ம் ஆண்டுகளில் 'மாரினர் 10' மற்றும் 2011ம் ஆண்டில் 'மெசஞ்சர்' ஆகிய விண்கலங்களை அனுப்பி வரலாறு படைத்தது.

இந்த வரிசையில் ஐரோப்பிய விண்வெளி முகமை மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமை ஆகியவை இணைந்து 'பெபிகொலம்போ' என்ற விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பின.

சுமார் 8 ஆண்டுகள் விண்வெளியில் பயணித்து 1,000 கோடி கிலோமீட்டர் தூரத்தை கடந்த இந்த விண்கலம், பூமியிலிருந்து 12 கோடியே 40 லட்சம் மைல் தொலைவில் உள்ள புதன் கிரகத்தை அடையும் முதற்கட்ட பணியை கடந்த 3ம் தேதி வெற்றிகரமாக தொடங்கியது.

விண்கலத்தின் முக்கிய தொகுதியிலிருந்து அறிவியல் ஆய்வு சாதனங்கள் வெற்றிகரமாக பிரிந்து புதனை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ளதாக தரைக் கட்டுப்பாட்டு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். வரலாற்றில் முதல்



முறையாக இருவேறு அறிவியல் விண்கலங்கள் ஒரே நேரத்தில் புதன் கிரகத்தை சுற்றி வந்து ஆய்வு செய்ய உள்ளன.

இந்த விண்கலம் வரும் நவம்பர் 21ம் தேதி புதனின் சுற்றுப் பாதையில் நுழைந்து, டிசம்பர் 9 மற்றும் 10ம் தேதிகளில் தனித்தனி ஆய்வு கலன்களாக பிரியும் என்றும், 2027ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது நேரடி அறிவியல் ஆய்வுகளை தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியனின் கடுமையான வெப்பத்திற்கு மத்தியில் செயல்படுவது குறித்து திட்ட செயல்பாட்டுப் பிரிவு தலைவர் இக்னாசியோ டான்கோ கூறும்போது,

'நம் முதுகின் பின்புறம் மிக வெப்பமான பீட்சா அடுப்பு எரிந்து கொண்டிருக்கும்போது வேலை செய்வதற்கு இது சமமானது' என்று யெூரிவித்தார்.

புதன் கிரகத்தில் நிலவும் காந்தப்புலம் மற்றும் நிழல் படர்ந்த பள்ளங்களில் பனி எவ்வாறு உறைந்துள்ளது போன்ற மர்மங்களை இந்த ஆய்வு வெளிக்கொண்டு வரும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
செப்டம்பர் 06, 2026

# ஆகஸ்டில் ஃபோர்ஸ் மோட்டார்ஸ் விற்பனை 62% உயர்வு

சென்னை 06, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி வேன் உற்பத்தியாளரும், முன்னணி வாகனத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றுமான ஃபோர்ஸ் மோட்டார்ஸ் லிமிடெட், 2026 ஆகஸ்ட் மாதத்தில் வலுவான உள்நாட்டு விற்பனை வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. நிறுவனம் ஆகஸ்ட் மாதத்தில் 3,721 வாகனங்களை விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் விற்பனையான 2,295 வாகனங்களுடன் ஒப்பிடுகையில், இது 62% ஆண்டு வளர்ச்சியாகும். நிறுவனத்தின் பல்வேறு வாகனப் பிரிவுகளிலும் நிலவிய ஆரோக்கியமான சந்தைத் தேவையே இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

நிறுவனத்தின் பல்வேறு தயாரிப்புகளுக்கு வாடிக்கையாளர்களிடையே கிடைத்துள்ள வரவேற்பும் இந்த வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஃபோர்ஸ் டிராவலர் என் மற்றும் அர்பனியா டீலக்ஸ் ஆகிய வாகனங்கள் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.



இந்த புதிய வாகனங்களின் ஆரம்பகட்ட உற்பத்தி மற்றும் சந்தை விரிவாக்கத்திற்குப் பின்னர், அவற்றின் விற்பனை அளவு நிலைத்தன்மையைப் பெற்றுள்ளது. இதன் மூலம் சந்தைத் தேவையை தொடர்ந்து சீராகப் பூர்த்தி செய்ய நிறுவனத்தால் முடிகிறது. டிராவலர் என், ஏற்கனவே வலுவான வரவேற்பைப் பெற்ற டிராவலர் வரிசையின் பாரம்பரியத்தைத் தொடர்கிறது. அதேவேளையில், அர்பனியா டீலக்ஸ், பிரீமியம் பகிர்வு போக்குவரத்துப் பிரிவில் ஃபோர்ஸ் மோட்டார்ஸின் நிலையை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்த செயல்திறன் குறித்து ஃபோர்ஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பிரசான் ஃபிரோடியா கூறுகையில், ஆகஸ்ட் மாதத்தில் பதிவான வலுவான வளர்ச்சி மகிழ்ச்சியளிப்பதாகவும், நிறுவனத்தின் பல்வேறு தயாரிப்புகளுக்கு வாடிக்கையாளர்களிடையே கிடைத்து வரும் வரவேற்பை இது பிரதிபலிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், வாடிக்கையாளர்களின் தேவைகளை தொடர்ந்து புரிந்துகொண்டு, அவர்களுக்கு ஏற்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் நிறுவனம் தொடர்ந்து கவனம் செலுத்தும் என்றும், தற்போதைய வளர்ச்சி வேகத்தை மேலும் வலுப்படுத்தி சீரான செயல்பாட்டைத் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்

சென்னை 06, செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று (04.09.2026) லோக் கல்யாண் மார்க்கில் உள்ள தமது இல்லத்தில் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு பெற்றவர்களுடன் ஞாலந்துரையாடினார்.

இந்த ஆண்டு, மூன்று துறைகளிலிருந்து 82 ஆசிரியர்களும் கல்வியாளர்களும் தேசிய நல்லாசிரியர் விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில், பள்ளிக் கல்வி, எழுத்தறிவுத் துறையிலிருந்து 48 ஆசிரியர்களும், உயர் கல்வி நிறுவனங்கள், பாலிடெக்னிக்குகளிலிருந்து 21 ஆசிரியர்/பேராசிரியர்களும், திறன் மேம்பாட்டு அமைச்சகத்திலிருந்து 13 திறன் பயிற்சியாளர்களும் அடங்குவர். விருது பெற்றவர்கள், தங்களின் கல்விப்பணிப் பயண அனுபவங்களை எடுத்துரைத்தனர். வகுப்பறைக் கற்றலை மேலும் ஈடுபாடு மிக்கதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதற்காகத் தாங்கள் கையாண்ட பல ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

குழந்தைகளின் கல்விசார் செயல்திறனை மட்டும் பார்க்காமல், அவர்களின் செயல்பாடுகள், அன்றாட வாழ்வு ஆகியவற்றிலும் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். பாரம்பரிய கூட்டுக் குடும்ப அமைப்பு குறைந்து வருவதைக் குறிப்பிட்ட அவர், குழந்தைகளின் வாழ்வில் ஆசிரியர்களின் பங்கு பெரும் முக்கியத்துவம் பெறுகிறது என்றார். போதைப்பொருள் பிரச்சனையைக் குறிப்பிட்ட பிரதமர், குழந்தைகளிடம் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆசிரியர்கள் விழிப்புடன் இருக்கவும், அதற்கான காரணத்தைக் கண்டறியவும், அத்தகைய குழந்தைகள் அப்பழக்கத்திலிருந்து விடுபட உதவவுமாறும் ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

குழந்தைகளின் களங்கமற்ற தன்மையைப் பாதுகாப்பது ஆசிரியர் ஆற்றக்கூடிய முக்கியப் பங்கு என்று பிரதமர் கூறினார். குழந்தைகளுக்கு சிறந்த அடிப்படை இயல்பும் ஆர்வமும் உண்டு என்றும், ஆசிரியர்கள் இந்த ஆர்வத்தை வளர்த்து, சரியான முறையில் வழிநடத்தினால், அவர்களின் வளர்ச்சிக்கு அவர்களால் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்னணு சாதனத் திரை நேரப் பிரச்சனையை எடுத்துரைத்த



பிரதமர், அது ஒரு பெரும் கவலையாக மாறியுள்ளது என்றார். குழந்தைகள் மின்னணுத் திரைகளில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள், அவர்கள் நள்ளிரவில் கைபேசிகளைத் தொடர்ந்து பயன்படுத்துகிறார்களா என்பது குறித்து பெற்றோரிடம் பேசுமாறு அவர் ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

விளையாட்டு, உடற்பயிற்சி, படைப்பாற்றல் ஆகியவை சார்ந்த செயல்பாடுகளில் ஆர்வத்தை வளர்ப்பதன் மூலம், குழந்தைகள் படிப்படியாக அதிகப்படியான திரை பயன்பாட்டிலிருந்து விடுபட முடியும் என்றும் அவர் கூறினார்.

# சென்னை நங்கநல்லூரில் கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலம்

சென்னை, 06 செப்டம்பர் 2026: பிஎஃப்சி பாரத சேவா - மக்கள் மேடை தென் சென்னை மாவட்டம் சார்பில், நங்கநல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ ருக்மணி சத்யபாமா சமேத வேணுகோபால ஸ்வாமி திருக்கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிஎஃப்சி பாரத சேவா - மக்கள் மேடை அமைப்பின் நிறுவனர் திருமதி. லதா ரஜினி காந்த் அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்ற இவ்விழாவில், சிறு குழந்தைகள் கிருஷ்ணர், ராதை வேடமணிந்து வந்து அனைவரையும் கவர்ந்தனர். விழாவில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்விழாவினை பிஎஃப்சி தென் சென்னை மாவட்டம் சார்பில் வேணுகோபால், உள்ளகரம் பி.சி.பாபு, ஏ.கணேஷ் என்கிற நெல்சன், நாகை ச.பாலா, செக்போஸ்ட்



பி.கோவிந்தன் மற்றும் பி.சுப்ரமணி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

மேலும் கோயில் நிர்வாகிகள் பி.சக்கரபாணி, பி.நேரு, டி. அந்தோணி, சந்தானம், ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# தீபாவளிக்கு ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று துவக்கம்

சென்னை 06, செப்டம்பர் 2026: தீபாவளி பண்டிகைக்கான ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று துவங்குகிறது. தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட முக்கிய பண்டிகைகளை சொந்த ஊர்களில் கொண்டாடி மகிழ்வதை மக்கள் வாடிக்கையாக கொண்டுள்ளனர். இதனால், இப்பண்டிகை நாட்களில் நகரப்பகுதியில் வசிக்கும் மக்கள், தங்களது சொந்த கிராமங்களுக்கு படையெடுக்கின்றனர். இதற்காக ரயில், பஸ்களில் டிக்கெட் முன்பதிவு செய்து, தங்களுக்கான பயண திட்டத்தை முன்கூட்டியே வகுக்கின்றனர். இந்த வகையில், ரயில்களில் பயணிக்க டிக்கெட் முன்பதிவை 60 நாட்களுக்கு முன்பு மேற்கொள்ளலாம். இதனை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். நடப்பாண்டு (2026) தீபாவளி பண்டிகை, வரும் நவம்பர் 8ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வருகிறது. தீபாவளியை சொந்த ஊர்களில் கொண்டாடுவதற்காக, நகரப்பகுதியில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் திட்டமிட்டு, ரயில்களில் டிக்கெட் முன்பதிவு செய்ய தயாராகி வருகின்றனர்.

தீபாவளிக்கு 2 நாட்களுக்கு முன்பாக பயணிக்க, நாளை (6ம் தேதி) ரயில் டிக்கெட் முன்பதிவு துவங்குகிறது. அதாவது, நவம்பர் 5ம் தேதி (வியாழக்கிழமை) பயணிக்க நாளைய தினம் காலை 8 மணிக்கு டிக்கெட் முன்பதிவு செய்யலாம். அதற்கு அடுத்த நாளான நவம்பர் 6ம் தேதி (வெள்ளிக்கிழமை) பயணத்திற்கு நாளை மறு நாளும், நவம்பர் 7ம் தேதி (சனிக்கிழமை) பயணத்திற்கு வரும் 8ம் தேதியும், தீபாவளி நாளான நவம்பர் 8ம் தேதி பயணிக்க வரும் 9ம் தேதியும், தீபாவளிக்கு அடுத்த நாளான நவம்பர் 9ம் தேதி பயணிக்க வரும் 10ம் தேதியும், நவம்பர் 10ம் தேதி பயணிக்க வரும் 11ம் தேதியும் டிக்கெட் முன்பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் சென்னை-சேலம்-கோவை மார்க்கம், சென்னை-திருச்சி-மதுரை-திருநெல்வேலி மார்க்கம், பெங்களூரு-சேலம்-நாகர்கோவில் மார்க்கம், கோவை-பாலக்காடு-எர்ணாகுளம் மார்க்கம் ஆகியவற்றில் இயங்கும் முக்கிய ரயில்கள் அனைத்திலும், தீபாவளி ரயில் டிக்கெட் முன்பதிவு ஓரிரு நிமிடங் களில் முடிந்துவிடும். அந்த அளவிற்கு முக்கிய வழித்தடங்



களில் இயங்கும் ரயில்களில் பயணிக்க மக்களிடம் கடும் போட்டி உள்ளது. குறிப்பாக சென்னையில் இருந்து திருநெல்வேலி, நாகர்கோவில், திருச்செந்தூருக்கு செல்லும் ரயில்களிலும், சென்னையில் இருந்து கோவைக்கு செல்லும் ரயில்களிலும் 2 முதல் 5 நிமிடங்களுக்குள் அனைத்து இருக்கைகளும் நிரம்பி டிக்கெட் முன்பதிவு முடிந்துவிடும் சூழல் உள்ளது. கடந்த காலங்களில் அவ்வாறு தான் நடந்திருக்கிறது.

ஐஆர்சிடிசி மற்றும் ரயில் ஒன் செயலிகள் மூலம் ஆன்லைனில் டிக்கெட் முன்பதிவு செய்வது பயணிகளிடையே அதிகரித்துள்ளது. இதனால், ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள டிக்கெட் முன்பதிவு மையங்களில் அதிகளவு கூட்டம் இருப்பதில்லை. அங்கு கூட்டமாக வரிசையில் நின்றாலும், அவர்கள் டிக்கெட் எடுக்க செல்வதற்குள் ஆன்லைனிலில் டிக்கெட் முன்பதிவு நடந்து முடிந்துவிடுகிறது. இதனால், பெரும்பாலான மக்கள், ஆன்லைன் மூலமே ரயில் டிக்கெட் முன்பதிவை மேற்கொள்கின்றனர்.

இந்த 2 மாதத்திற்கு முன்பான டிக்கெட் முன்பதிவை தவறவிடும் பயணிகள், ரயில் புறப்படுவதற்கு முந்தைய நாளில் தட்கல் டிக்கெட் முன்பதிவை மேற்கொண்டு பயணிக்கின்றனர். அதற்கும் கடும் போட்டி இருந்து வருகிறது. இதனால், தீபாவளிக்காக 60 நாட்களுக்கு முன் துவங்கும் இந்த டிக்கெட் முன்பதிவை பயணிகள் முறையாக பயன்படுத்தி, தங்களது பயணத்தை சிரமமின்றி மேற்கொள்ள ரயில்வே நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுபற்றி ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், 'தீபாவளியையொட்டிய நாட்களுக்கான ரயில் பயண டிக்கெட் முன்பதிவு நாளை துவங்குகிறது. வழக்கமான ரயில்களோடு சிறப்பு ரயில்களும் இயக்கப்படவுள்ளது. அதனை பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். விரைவில் அந்த சிறப்பு ரயில்கள் அறிவிப்பு வெளியிடப்படும்' என்றனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# மாம்பலம் பகுதியில் மதுபாரில் வீண்தகராறு செய்து ஒருவரை கத்தியால் தாக்கிய 3 நபர்கள் கைது







சென்னை 06, செப்டம்பர் 2026: சென்னை, கொளத்தூர், லட்சுமிபுரம் பகுதியில் வசித்து வரும் வெங்கடேஷ், வ/29, த/பெ. சண்முகம் என்பவர் மதனகுப்பத்தில் கார் சர்வீஸ் கடை நடத்தி வருவதாகவும், வெங்கடேஷ் கடந்த 03.09.2026 அன்று இரவு அவரது நண்பரின் பிறந்த நாளை முன்னிட்டு, நண்பர்களுடன் சென்று மாம்பலம் பகுதியில் உள்ள தனியார் பாரில் மது அருந்திக்கொண்டிருந்த போது, அங்கு அருகில் மது அருந்திக் கொண்டிருந்த 3 நபர்கள் அவர்களுக்குள் தகராறில் ஈடுபட்டு அடிதடியில் ஈடுபட்டுள்ளனர். உடனே அருகில் இருந்து வெங்டேஷ் சண்டை போடதீர்கள் என கூறி விலக்கிவிட்டு, வெளியே போய் சண்டை போடுங்கள் என்று கூறியதும், அந்த நபர்கள் உன் வேலையை பாருடா என கூறி வீண்தகராறு செய்து வெங்கடேஷை கையால் தாக்கியுள்ளனர். உடனே வெங்கடேஷ் பிரச்சனை செய்ய வேண்டாம் என நினைத்து அவரது நண்பர்களுடன் சேர்ந்து பாரிலிருந்து வெளியே வந்த போது மேற்படி 3 நபர்களும் பின் தொடர்ந்து வந்து வெங்கடேஷை கத்தியால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். தாக்குதலில் இரத்தகாயமடைந்த வெங்கடேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று, தன்னை தாக்கிய நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கொடுத்த புகாரின் பேரில் ஆர்-1 மாம்பலம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-1 மாம்பலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.அருண்குமார், வ/26, மேற்கு மாம்பலம், சென்னை 2.மணிகண்டன், வ/23, நந்தனம், சென்னை 3.நீத்திஸ்குமார், வ/26, நந்தனம், சென்னை ஆகிய 3 நபர்களை நேற்று முன்தினம் (04.09.2026) கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட அருண்குமார் மற்றும் மணிகண்டன் மீது ஏற்கனவே தலா ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (04.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் இன்று முதல் 9-ம் தேதி வரை அசாம், மேகாலயா, மணிப்பூர், அருணாச்சல பிரதேச மாநிலங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்




சென்னை 06, செப்டம்பர் 2026: குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இன்று (2026 செப்டம்பர் 6) முதல் 9-ம் தேதி வரை அசாம், மேகாலயா, மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு நான்கு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, குடியரசு துணைத்தலைவர் வரலாற்று, சமூக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களைப் பார்வையிடுவதுடன், பல்வேறு கல்வி, கலாச்சார, பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

இன்று (செப்டம்பர் 6), குடியரசு துணைத் தலைவர் அசாமின் குவஹாத்திக்குச் செல்கிறார்.

அங்கு, கன்யா மகாவித்யாலயா என்று முன்பு அழைக்கப்பட்ட கீதாநகர் கல்லூரியின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் அவர் கலந்துகொள்கிறார். அதனைத் தொடர்ந்து, குவஹாத்தியில் உள்ள ஸ்ரீமந்த சங்கரதேவ சுகாதார அறிவியல் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்துகொள்கிறார்.

செப்டம்பர் 7 அன்று, குவஹாத்தி பல்கலைக்கழகத்தில் நடைபெறும் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்கிறார். அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் மாநாட்டு மையத்தில் மாணவர்கள், பேராசிரியர்கள், முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடுகிறார். அதன்பிறகு மேகாலயாவின் ஷில்லாங்கிற்குச் செல்லும் அவர், அங்கு சோசோ தாம் அரங்கத்தில் நடைபெறும் பொது வரவேற்பு, கலாச்சார நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

செப்டம்பர் 8 அன்று, மணிப்பூரின் இம்பாலுக்குச் செல்லும் அவர் மொய்ராங்கில் உள்ள ஐஎன்ஏ அருங்காட்சியகம், போர் நினைவிடம், இம்பாலில் உள்ள சைனிக் பள்ளி ஆகியவற்றைப் பார்வையிடுகிறார். அதன்பிறகு அவர் அருணாச்சல பிரதேசத்தின் இடாநகருக்கு செல்லவுள்ளார்.

செப்டம்பர் 9 அன்று, அருணாச்சல பிரதேச சட்டமன்றத்தின் சிறப்பு அமர்வில் கலந்துகொண்டு, சட்டமன்ற கலைக்கூடம், அருங்காட்சியகம் ஆகியவற்றைக் குடியரசு துணைத் தலைவர் பார்வையிடவுள்ளார். மேலும் அவர் இடாநகரில் உள்ள நியேதர் நம்லோ, ஜவஹர்லால் நேரு மாநில அருங்காட்சியகம், செவித்திறன் அற்றோர், பார்வையற்றோருக்கான டோனி போலோ மிஷன் பள்ளி ஆகியவற்றையும் பார்வையிடவுள்ளார்.

# அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம்: உரிய நேரத்தில் கடன் ஆதரவு மூலம் வணிகங்களை வலுப்படுத்துதல்

சென்னை 06, செப்டம்பர் 2026: இசிஎல்ஜிஎஸ் 5.0 எனப்படும் 5-ம் கட்ட அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம், பல்வேறு இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்குத் தேவையான கடன் உத்தரவாத ஆதரவை வழங்கி வருகிறது. தேசிய கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது அரசு ஆதரவுடனான உத்தரவாதங்கள் வாயிலாகக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தகுதியுள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் விமான நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கிறது. கொவிட்-19 பெருந்தொற்றின் போது அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் முந்தைய கட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, தற்போது இது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. விரிவான அணுகுமுறை, ஜன் சமர்த் வலைதளம் மூலமான டிஜிட்டல் நடைமுறை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் தீவிரப் பங்களிப்பு ஆகியவை இதன் பரவலை விரிவுபடுத்தியுள்ளன. பணப்புழக்கத்தை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பைப் பாதுகாத்தல் மற்றும் விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், ஐந்தாம் கட்ட அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது.

நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்:

மாறிவரும் உலகளாவிய புவிசார் அரசியல் சூழல்களுக்கு மத்தியில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கும், வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும், தடையற்ற வணிகச் செயல்பாடுகளை உறுதி செய்வதற்கும் இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. இத்தகைய சவால் களை எதிர்கொள்ளும் வகையில், 2026 மே 5 அன்று அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டம் 5.0-க்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இது தகுதியுள்ள வணிகக் கடன் பெறுநர்களுக்குக் கூடுதல் செயல்பாட்டு மூலதனத்தை வழங்கு வதற்காக, அரசு ஆதர வுடனான கடன் உத்தர வாதங்களை வழங்கு கிறது. ரூ.2.55 லட்சம் கோடி வரையிலான கூடுதல் கடன் விநியோகத்தை எளிதாக்குவதையும், தடையற்ற உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவளிப்பதையும் இத்திட்டம் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய அம்சங்கள்:

இசிஎல்ஜிஎஸ் 5.0 திட்டமானது, 2027 மார்ச் 31 வரை அல்லது ரூ.2.55 லட்சம் கோடி மதிப்பிலான உத்தரவாதங்கள் வழங்கப்படும் வரை, இவற்றில் எது முந்தையதோ அது வரை செயல்பாட்டில் இருக்கும். அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகள், அட்டவணைப்படுத்தப்பட்ட நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தகுதியுள்ள வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டம் அனைத்துத் துறைகளிலும் செயல் படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

திட்டத்தின் முன்னேற்றம்:

இசிஎல்ஜிஎஸ் 5.0 திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. 2026 ஆகஸ்ட் 20 நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6,73,979 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒட்டுமொத்தத் தொகை ரூ.2,50,024 கோடியை எட்டியுள்ளது. தகுதியுள்ள கடன் பெறுநர்கள் ஜன் சமர்த் இணையதளமான https://www.jansamarth.in/home என்ற முகவரி மூலம் விண்ணப்பித்து இத்திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

# கார்கே பேசிய மைதானத்தில் பரிகாரம் பூஜை விவகாரம்; உத்தரகாண்ட் பாஜக தலைவர் மீது 7 பிரிவில் வழக்கு: கர்நாடகா போலீஸ் அதிரடி

சென்னை 06, செப்டம்பர் 2026: உத்தரகாண்டில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பொதுக்கூட்டம் நடத்திய இடத்தில் புனித பரிகார பூஜை செய்த பாஜக மாநில தலைவர் உள்ளிட்டோர் மீது பெங்களூரு போலீசார் அதிரடியாக வழக்கு பதிவு செய்துள்ளனர். உத்தரகாண்ட் மாநிலம் ஹல்த்வானி பகுதியில் உள்ள ராம்லீலா மைதானத்தில், கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் பிரம்மாண்ட பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டம் முடிந்த 2 நாட்கள் கழித்து, அந்த மைதானத்தில் பாஜக மற்றும் சார்பு அமைப்பினர் சிலர் தூய்மைப்படுத்துவதாகக் கூறி புனித பரிகார சடங்குகளை நடத்தினர்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மூத்த தலைவரான கார்கேவை அவமதிக்கும் நோக்கத்துடனும், சாதிய தீண்டாமை எண்ணத்துடனும் இந்த செயல் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக நாடு முழுவதும் பெரும் சர்ச்சை வெடித்தது. இந்த இழிவான செயலுக்கு கர்நாடக மாநில காங்கிரஸ் மூத்த தலைவரும், அக்கட்சியின் எஸ்சி, எஸ்டி பிரிவு முன்னாள் துணை தலைவருமான டி.ஆர். ராமப்பா கடும் எதிர்ப்பு தெரிவித்து, பெங்களூரு விதான் சவுதா காவல் நிலையத்தில் பரபரப்பு புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில், பரிகார பூஜையை பகிரங்கமாக ஆதரித்து பேசிய உத்தரகாண்ட் மாநில பாஜக தலைவர் மகேந்திர பட் மற்றும் உள்ளூர் நிர்வாகிகள் மீது வன்கொடுமை உள்ளிட்ட 7 கடுமையான பிரிவுகளின் கீழ் பெங்களூரு போலீசார் 'ஜீரோ எப்.ஐ.ஆர்.' பதிவு செய்தனர். இந்த சம்பவம் தங்கள் எல்லைக்கு வெளியே நடந்ததால், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் மேல் நடவடிக்கைக்காக ஹல்த்வானி காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. இந்த விவகாரத்திற்கு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், 'அரசியல் கோஷங்களால் மைதானம் மாசடைந்ததால் மட்டுமே தூய்மை செய்தோம்' என்று மாநில பாஜக தலைவர் மகேந்திர பட் விளக்கம் அளித்துள்ளார்.

இதே விவகாரம் தொடர்பாக ராகுல் காந்தி மீதும் மற்றொரு வழக்கை உத்தரகாண்ட் போலீசார் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தவெக ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பில்லை: கனிமொழி எம்பி விமர்சனம்

சென்னை 06, செப்டம்பர் 2026: திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி, தனது எக்ஸ் தளம் பதிவில் கூறியிருப்பதாவது: திரு நெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகே கண்ணநல்லூரில் ஏற்பட்ட மோதலில், ஊராட்சி மன்ற தலைவர் மகாராஜன், மர்ம நபரால் கல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட செய்தி அதிர்ச்சியளிக்கிறது. குடிநீர் பிரச்சனைக்காக போராடிய மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ஊராட்சி மன்ற தலைவர் கொலை செய்யப்பட்டு, கொலையாளிகள் தப்பிச் செல்லும் அளவிற்கு தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. குழந்தைகள், பெண்கள், மக்கள் பிரதிநிதிகள் என யாருக்கும் பாதுகாப்பில்லாத நிலையை தவெக ஆட்சி உருவாக்கியுள்ளது. இந்த கொலைக்கு பின்னால் உள்ள காரணங்களை முழுமையாக விசாரித்து, குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இவ்வாறு பதிவில் குறிப்பிட்டு உள்ளார்.

# கமல்ஹாசன் - எஸ்.யு.அருண் குமார் கூட்டணிக்கு அமோக வரவேற்பு; 'லுக் டெஸ்ட்' காட்சிகள் வைரல்



சென்னை 06, செப்டம்பர் 2026: கமல்ஹாசன் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கான 'லுக் டெஸ்ட்' நடைபெற்றது. அதன் காட்சிகள் வெளியான உடனேயே இணையத்தில் வைரலாகி, ரசிகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்களிடையே மிகுந்த ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் தூண்டியுள்ளன. கமல்ஹாசனின் இந்த ஈர்க்கக்கூடிய புதிய தோற்றம், சமூக வலைதளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது; ரசிகர்கள் இத்திரைப்படம் குறித்த கூடுதல் தகவல்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

கமல்ஹாசனும், திரைப்பட இயக்குநர் எஸ்.யு.அருண் குமாரும் இணையும் முதல் படம் இது என்பதால், இக்கூட்டணி மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொண்டு, தனித்துவமான கதாபாத்திரங்களை ஏற்று நடிப்பதில் பெயர் பெற்ற கமல்ஹாசனின் இந்த புதிய தோற்றம், படத்தின் கதைக்களம் குறித்த ரகசியத்தைக் காக்கும் அதே வேளையில், படத்திற்காக உருவாக்கப்படும் உலகத்தைப் பற்றிய ஒரு சிறு பார்வையை ரசிகர்களுக்கு அளித்து பெரும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்படும் இத்திரைப்படத்தை ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் (ஆர்கேஎஃப்ஐ) மற்றும் டர்மெரிக் மீடியா ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. கமல்ஹாசன் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க, எஸ்.யு.அருண் குமார் இயக்கத்தில் உருவாகும் இப்படம், படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'லுக் டெஸ்ட்' வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திரைப்படம் குறித்த கூடுதல் விவரங்கள் பின்னர் அதிகாரப் பூர்வமாக வெளியிடப் படும்.

# பாடகி தீ - அமெரிக்க பாப் இசை கலைஞர் லாரா ராஜ் ஆஃப் KATSEYE இணைந்து பாடிய 'வாரி வாரி' பாடலின் ரீமிக்ஸ் வெளியீடு



சென்னை 06, செப்டம்பர் 2026: சுயாதீன இசையின் மூலம் சர்வதேச அளவில் இசை ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த தமிழ் பாடகி தீ.. அமெரிக்க பாப் இசை கலைஞரான லாரா ராஜ் ஆஃப் KATSEYE உடன் இணைந்து 'வாரி வாரி' எனும் பாடலின் ரீமிக்ஸ் வடிவத்தை வெளியிட்டுள்ளனர்.

இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைத்து தயாரித்து, படலாசிரியர் விவேக் வரிகளில், பாடகி தீ குரலில் ஒலித்த 'வாரி வாரி' எனும் தமிழ் இண்டி பாடல் அண்மையில் வெளியாகி, மிகப் பெரிய வெற்றியைப் பெற்று தொடர்ந்து இசை ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இந்த தருணத்தில் அமெரிக்க பாப் இசை பாடகியான லாரா ராஜ் ஆஃப் ரிகிஜிஷிணிசீணி உடன் இணைந்து 'வாரி வாரி - க்ஷிகிஸிமி க்ஷிகிஸிமி' எனும் பாடலின் ரீமிக்ஸை பாடி வெளியிட்டுள்ளனர். இந்த பாடலுக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார், 808 கிருஷ்ணா இணை தயாரிப்பாளராக பணியாற்றியிருக்கிறார். சர்வதேச இசைக் கலைஞர்களான தீ மற்றும் லாரா ராஜ் ஆகியோரின் கூட்டணியில் உருவாகி இருக்கும் இந்த ரீமிக்ஸ் பாடல் - கலாச்சார பரிமாற்றத்தின் அடையாளமாக திகழ்ந்து, இசை ரசிகர்களை வெகுவாக கவர்ந்திருக்கிறது.

பாடகி தீ - லாரா ராஜ் குரலில் ஒலிக்கும் இந்த பாடல் - தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த இரு பெண் கலைஞர்களின் சர்வதேச இசைக் கூட்டணியில் உருவாகி, உலகளாவிய இசை ரசிகர்களின் விருப்பத்திற்குரிய பாடல் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறது.

# 'மொத ராத்திரி' திரைப்படத்தின் நன்றி தெரிவிக்கும் விழா!




சென்னை 06, செப்டம்பர் 2026: ராஜா கருப்பசாமி இயக்கியுள்ள இப்படத்தில் ரிஷிகாந்த் மற்றும் அனிஷ்மா அனில் குமார் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள திரைப்படம் 'மொத ராத்திரி'. ஆகஸ்ட் 21 ஆம் தேதி உலகம் முழுவதும் பிரம்மாண்டமாக வெளியாகி வெற்றி பெற்ற இந்த திரைப்படத்தின் நன்றி தெரிவிக்கும் விழா நடைபெற்றது.

தயாரிப்பாளர் நவீன் யெர்னேனி, "இந்த படத்தை தயாரித்ததில் மிகுந்த மகிழ்ச்சி. ரசிகர்களும் இந்த படத்தை கொண்டாடுகின்றனர். இயக்குநர் ராஜா, ஹீரோ ரிஷிகாந்த் மற்றும் படக்குழுவினருக்கு வாழ்த்துக்கள். ராஜா கதை சொன்ன உடனே மிகவும் பிடித்து விட்டது. ஹவுஸ்ஃபுல்லாக எல்லா திரையரங்குகளில் ஓடிக் கொண்டு இருக்கிறது. மற்ற மொழிகளிலும் இந்த படத்தை எடுத்துச் செல்லும் எண்ணம் இருக்கிறது. 'குட் பேட் அக்லி', 'டியூட்' படங்களை தொடர்ந்து தமிழில் இது எங்களுக்கு மூன்றாவது வெற்றி படம். இதோடு 'இருமுடி கட்டு' படத்தையும் வெற்றி பெற வைத்த அனைவருக்கும் நன்றி" என்றார்.

ஒளிப்பதிவாளர் சுரேந்திரன் பரஞ்சோதி, "நல்ல படத்தில் வேலை செய்து இருக்கிறோம் என்று திருப்தி உள்ளது. வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர்களுக்கும் படக்குழுவினருக்கும் நன்றி".

படத்தொகுப்பாளர் அசோக் அர்ஜூனன், "என் மீது நம்பிக்கை வைத்த தயாரிப்பாளர்களுக்கும் இயக்குநருக்கும் நன்றி. அந்த நம்பிக்கையை காப்பாற்றியிருக்கிறோம் என நினைக்கிறேன். என் முதல் படத்திலேயே எனக்கு பாராட்டுகள் கிடைத்து வருவது மகிழ்ச்சி".

பப்ளிசிட்டி டிசைனர் வியாகி, "ராஜா கதை சொன்னதிலிருந்து இது எங்களுடைய படமாகி விட்டது. படத்தில் எல்லோருமே பாசிட்டிவாக இருந்தார்கள். அதனுடைய ரிசல்ட் பிரம்மாண்ட வெற்றியாக மாறியிருக்கிறது".

இயக்குநர் ராஜா கருப்பசாமி, "என் கதையை நம்பி வாய்ப்பளித்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்திற்கும், ஒளிப்பதிவாளர் தினேஷ் கருப்புசாமி அண்ணனுக்கும், என் படக்குழுவினருக்கும் நன்றி. அனைத்து திரையரங்குகளிலும் ஹவுஸ்ஃபுல் என்பது மகிழ்ச்சி. அனிஷ்மா திறமையான நடிகை. ஆறு வருடத்திற்கு முன்னால் இந்த கதையை எடுத்துக் கொண்டு அலைந்த போது எல்லோரும் சொன்ன ஒரே வார்த்தை ரிஷிகாந்தை மாற்ற வேண்டும் என்பது தான். ஆனால், இப்போது தமிழ் சினிமாவிற்கு ஐடியாலஜியோடும் சமூகப் பொறுப்போடும் ஒரு ஹீரோ கிடைத்து விட்டார். என் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் நன்றி. சின்ன படங்களுக்கு எப்போதுமே உங்கள் ஆதரவு தேவை. அது மட்டும் தான் தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்".

நடிகர் பகவதி பெருமாள், "சினிமாவில் 100 பேர் ஜெயித்தால் லட்சம் பேர் காணாமல் போகிறார்கள். இது போன்ற நல்ல படங்கள் வெளியாகி வெற்றி பெற தயாரிப்பாளர்கள்தான் முக்கிய காரணம். அந்த வகையில், இந்த கதையை தேர்ந்தெடுத்து தயாரித்த மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு நன்றி. பலருடைய வாழ்க்கையில் இந்த படம் ஒளி ஏற்றி இருக்கிறது. சின்ன பட்ஜெட்டில் படம் செய்பவர்களுக்கு தான் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. அதை உணர்ந்து இப்போது பல படங்கள் வெளியாகிறது. உங்கள் ஆதரவு நிச்சயம் வேண்டும்".

நடிகர் ரிஷிகாந்த், "உங்கள் வீட்டு பையனாக நினைத்து எனக்கும் இந்த படத்திற்கு ஆதரவு தந்த ஊடகத்துறையினருக்கும் ரசிகர்களுக்கும் நன்றி. ஆறு வருடங்களாக இந்த படத்தை நானும் தம்பி ராஜாவும் சுமந்து கொண்டிருந்தோம். எங்களை நம்பி வாய்ப்பளித்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு நன்றி. குடும்பத்தோடு அனைவரும் திரையரங்குகளுக்கு வந்து பார்த்து சிரித்து மகிழும்படியான ஒரு படத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்தோம். அது இன்று நடந்திருக்கிறது. படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி".

# மீன்பிடி துறைமுகம் பகுதியில் வீண் தகராறு செய்து, ஒருவரின் கைவிரலை கடித்து, கட்டையால் தாக்கிய நபர் கைது



சென்னை 06, செப்டம்பர் 2026: சென்னை, தண்டையார்பேட்டை, திடீர் நகர் 1வது தெருவில் வசித்து வரும் வீரமுத்து, வ/36, த/பெ.ஆடியபாதம் என்பவர் போட்டில் மரம் விடும் வேலை செய்து வருவதாகவும், கடந்த 03.09.2026 அன்று மாலை, பல்லவன் நகர் 1வது தெருவில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபரான விஷால் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து, வீரமுத்துவின் காலில் ஏற்றியதாகவும், அப்போது விஷால் தெரியாமல் செய்கிறார் என்று நினைத்து, அமைதியாக இருந்ததாகவும், பின்னர் மீண்டும் சிறிது நேரம் கழித்து வந்து, விஷால், வீரமுத்துவின் காலை மிதித்ததாகவும், அப்போது எதற்காக இப்படி செய்கிறாய்? என்று விஷாலிடம் கேட்டபோது, நான் இப்படி தான் செய்வேன், நீ ஓரமாக நில் என்று கூறி, தகாத வார்த்தைகள் பேசி, வீரமுத்துவை கைகளாலும், கட்டையாலும் தாக்கி, அவரது கைவிரலை கடித்துவிட்டு, கட்டையை காட்டி, கொலை மிரட்டல் விடுத்து, அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட வீரமுத்து தன்னிடம் வீண் தகராறு செய்து, தாக்கிய விஷால் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு, என்,-4 மீன்பிடி துறைமுகம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

என்-4 மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி விஷால், வ/19, பல்லவன் நகர், தண்டையார்பேட்டை, சென்னை என்பவரை நேற்று முன்தினம் (04.09.2026) கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி விஷால் என்பவர் மீன்பிடி தொழில் செய்து வருவதும், இவர் மீது ஏற்கனவே தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் 3 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி விஷால் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (04.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்